# 100 நாள் வேலைத் திட்டம் : நிதி வழங்காத ஒன்றிய பா.ஜ.க. அராஜக அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!



உதகை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஒன்றிய செயலாளர் பரமசிவன் வரவேற்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலைமையேற்று சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, பா.மு.முபாரக், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், பெற்றோ அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் மற்றும்.சாலவாக்கம் ஒன்றியத்தில்.100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் தமிழகத்திற்கு நிதி தராத ஒன்றிய அரசை கண்டித்து மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி குமார், என் எஸ். பாரிவள்ளல். பி சசிகுமார் உள்ளிட்ட ஒன்றிய.பேரூர். கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய (மோடி) அரசை கண்டித்து பாடியநல்லூர் ஊராட்சியில் மொண்டியம்மன் நகர் மார்கெட் அருகில் மற்றும் காரணோடை ஊராட்சியில் காரணோடை பஜார் அருகில் ஆகிய இரண்டு இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய மாவட்ட நிர்வாகிகள், மகளிர் ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், மகளிர், பொதுமக்கள மற்றும் 100 நாள் வேலைவாய்ப்பில் பணிபுரியும் மகளிர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் கவரப்பேட்டை பஜார் பகுதியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது இதில் சைதை சாதிக், மு.பகலவன், ஒன்றிய கழகச் செயலாளர் கி.வே. ஆனந்த்குமார், ந.பரிமளம், பா.செ.குணசேகரன் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பெண்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை திட்டத்திற்கு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய 434 கோடி நிதிநியை தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நேற்று பரந்தூர் மற்றும் ஏனாத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு மற்றும் ஆர்.கே..தேவேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட பூண்டி மேற்கு ஒன்றியம் பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலக எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய கழக செயலாளர் டி.கிறிஸ்டி (எ) அன்பரசு தலைமையில் ப.சிட்டிபாபு. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.மோதிலால் முன்னிலையில் நடைபெற்றது இதில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்து கொண்டு கண்டன கோஷமிட்டனர். இதில் நிர்வாகிகள் பொன்.பாண்டியன், பாஸ்கரன், சித்ரா ரமேஷ் , லட்சுமணன் , ஆனந்த், நடராஜன், தேவேந்திரன் , டில்லி பாபு, சௌகார் பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



100 நாள் வேலை உறுதி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய 4000 கோடி ரூபாயை தராமல் ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து பல்லாவரம் தொகுதி புனித தோமையர் மலை ஒன்றிய திமுக சார்பில் பொழிச்சலூர் பேருந்து நிலையம் அருகில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் பல்லவபுரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நடைபெற்றது 2000 மேற்பட்டோர் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். இதில் ஒன்றியச் செயலாளர் ரவி, பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், தொ.மு.ச. இரா.பொன்னுராம், செல்வராஜ், ராஜா, வனஜா தயாளன், ஜோசப், , மனோகர், பம்மல் வீ. தினேஷ் , சௌமியா , பிரசாத், இளங்கோவன், மாரிமுத்து, கோ. ஜானகிராமன் உள்ளிட்டோர் முழக்கமிட்டனர்.



ஒன்றிய பாஜக அரசு 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி வழங்காததை கண்டித்து திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியத்தில் மாவட்ட பொருளாளர் நகர பொறுப்பாளர் வெ.விஸ்வநாதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது . இதில் ஒன்றிய பெருந்தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் ஆர்.டி.அரசு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஆர்.கே. ரமேஷ் தலைமை பொது குழு உறுப்பினர் எம்.செல்வகுமார் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வே.தனசேகரன், தே.சின்னம்மா, த.சுகன்யா, பா.வளர்மதி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் இளைஞரணி மாணவரணி மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்